தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 62/பேரூ/2022

நாள் 13.06.2022

திரு. பெ. பிரபு,
தெசவிளக்கு, சேலம் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆட்டையாம்பட்டி பேரூராட்சி, சேலம் மாவட்டம் ... எதிர்மனுதாரர்

சேலம் மாவட்டம், தெசவிளக்கு, எண்.5/161 கூடாரமேடு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. பெ. பிரபு என்பவரின் 30.05.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.06.2022ல் பெறப்பட்டு, 62/2022என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சேலம் மாவட்டம், தெசவிளக்கு, எண்.5/161 கூடாரமேடு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. பெ. பிரபு தமது 30.05.2022 நாளிட்ட புகார் மனுவில் ஆட்டையாம்பட்டி பேரூராட்சி நடுப்பிள்ளையார் கோவில் பின்புறம் உள்ள சிமெண்ட் சாலையின் ஒரு பகுதி இடிந்து அருகிலுள்ள சாக்கடையில் விழுந்து பெரும் குழியாகியுள்ளதால், அவ்வழியில் செல்லும் வாகன ஓட்டிகளுக்கு விபத்து ஏற்படும் வாய்ப்பு உருவாகியுள்ளது என்றும், எனவே உடனடியாக நடவடிக்கை எடுத்து சாலையின் அப்பகுதியை சரிசெய்து தருமாறு ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு 30.12.2021ல் மனு அளித்தும், அதன் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் அவர் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறும், தன்னால் முன்வைக்கப்பட்டுள்ள மேற்கண்ட

புகாரின் அடிப்படையில், சாலையை சீரமைத்திட விசாரணை மேற்கொண்டு ஆணையினைப் பிறப்பிக்குமாறும் கோரி இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அளித்துள்ளார்.

2. ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் மனுதாரர் ஆகியோர் 08.06.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 02.06.2022 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டன. மனுதாரர் மற்றும் ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் இருவரும் இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

மனுதாரர் பெ. பிரபு அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "ஆட்டையாம்பட்டி பேரூராட்சி நடுபிள்ளையார் கோவில் பின்புறம் உள்ள சிமெண்ட் சாலையின் ஒரு பகுதி இடிந்து, அதன் அருகில் அமைந்துள்ள சாக்கடையில் விழுந்து சாலை பழுதாகியுள்ளது. இதனால் அப்பகுதியில் விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால், இது தொடர்பாக பேரூராட்சி அலுவலகத்தில் புகார் மனுக்கள் அளித்தும், இன்றுவரை மேல் நடவடிக்கை ஏதும் பேரூராட்சியால் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட சாலையில் ஏற்பட்டுள்ள பழுதினை நீக்கவும், இதுவரை பழுதுநீக்கம் செய்யாமல் மெத்தனமாக இருந்த பேரூராட்சி அலுவலர்கள் மீது 17 (a) ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இப்புகார் தொடர்பான புகைப்பட நகலினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3. ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள வாக்குமூலத்தில் "ஆட்டையாம்பட்டி பேரூராட்சி நடுபிள்ளையார் கோவில் பின்புறம் உள்ள சிமெண்ட் சாலையில் ஏற்பட்டுள்ள பழுதினை நீக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு, இன்னும் ஒருவார காலத்திற்குள் செய்து முடிக்கப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது 7.6.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையே எனது மேல்விளக்கமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரரின் புகார் மனு குறித்து அளித்துள்ள 7.6.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் ஆட்டையாம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட 7வது வார்டு நடுபிள்ளையார் கோவில் பின்புறம் உள்ள சாக்கடையின் ஒரு பகுதி பழுதானதைத் தொடர்ந்து தீர்மான எண்.9(4) நாள் 31.3.2022ல் மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ரூ.4.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட திட்டப் பணிகளை மேற்கொள்ள நடப்பாண்டில் அரசிடமிருந்து கருத்துரு கோரப்படும்பொழுது, இப்பணியினையும் சேர்த்து உரிய அனுமதி பெற்று பணி செய்து முடிக்கப்படும். மேலும், அரசிடமிருந்து நிதி கிடைக்கப்பெறாத பட்சத்தில் பேரூராட்சி மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் பேரூராட்சியின்

நிதிநிலைமைக்கேற்ப உரிய நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

5. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், வாக்குமூலம், வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்ட புகைப்படம், ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம் மற்றும் விளக்க அறிக்கை மற்றும் ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. ஆட்டையாம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட நடுபிள்ளையார் கோவில் பின்புறம் உள்ள சிமெண்ட் சாலையின் ஒரு பகுதி சேதமடைந்துள்ள நிலையில், அவ்வழியாக செல்லும் வாகன ஓட்டிகளுக்கு விபத்து ஏற்படும் வாய்ப்புள்ளதாகவும் எனவே, உடனடியாக அதனை சீரமைத்துத் தருமாறு மனுதாரரால் 30.12.2021ல் ஆட்டையாம்பட்டி பேரூராட்சிக்கு புகார் மனு அளிக்கப்பட்டு அதற்கான ஒப்புகையும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், இம்முறைமன்ற நடுவத்தில் 8.6.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையின்போது பழுதடைந்துள்ள சாலையின் புகைப்பட நகல் இம்முறைமன்ற நடுவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதனை பேரூராட்சி நிர்வாகம் பாதுகாப்பு கருதி தாமாகவே முன்வந்து சீரமைத்து தந்திருக்கவேண்டும். மாறாக மனுதாரரால் புகார் அளிக்கப்பட்டு ஐந்து மாதங்கள் முடிவுற்ற நிலையிலும் சீரமைப்பு செய்யாதது கண்டனத்திற்குரியது. மக்களின் அத்தியாவசியப் பணிகளுக்கு பேரூராட்சி நிர்வாகம் முன்னுரிமை அளிக்கவேண்டியது கட்டாய கடமை என்ற போதிலும், மிகச் சிறிய ஆனால் வாகன ஓட்டிகளுக்கு விபத்து ஏற்படக்கூடிய சாலைப் பழுதினைக்கூட உடனே கண்காணித்து நடவடிக்கை மேற்கொள்ளாதது மிகவும் கண்டிக்கத்தக்கது. ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள வாக்குமூலத்தில் மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ள நடுபிள்ளையார் கோவில் பின்புறமுள்ள சிமெண்ட் சாலையில் ஏற்பட்டுள்ள பழுதினை இன்னும் ஒருவார காலத்திற்குள் சீரமைத்து முடிக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள விளக்க அறிக்கையில் ஆட்டையாம்பாட்டி பேரூராட்சிக்குட்பட்ட 7வது வார்டு நடுபிள்ளையார் கோவில் தெருவில் பழுதடைந்த வடிகால்கள் பராமரிப்பு பணி மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், திட்டப் பணிகளை மேற்கொள்ள அரசிடமிருந்து கருத்துருக்கள் கோரப்படும்பொழுது மேற்கண்ட பணியினையும் சேர்த்து உரிய அனுமதி பெற்று செய்து முடிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் கோரிக்கை பழுதடைந்துள்ள சாலையினை சரிசெய்து தருமாறு கோருவதாகும். மனுதாரரின் கோரிக்கை மக்களின் பாதுகாப்பு குறித்ததால், அதனை உடனடியாக கவனித்து சீரமைப்பது அவசியம்.

6. ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தமது வாக்குமூலத்தில் அளித்துள்ள உறுதிமொழியின் அடிப்படையில், சேலம் மாவட்டம், ஆட்டையாம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட நடுபிள்ளையார் கோவில் பின்புறமுள்ள சிமெண்ட் சாலையில் ஏற்பட்டுள்ள பழுதுகள் ஒருவார காலத்திற்குள் செய்து முடிக்கப்படும் என தெரிவித்துள்ளதன்பேரில், மேற்கண்ட சாலைப் பழுதுகள் மூன்றுவார காலத்திற்குள்

சீரமைப்படவேண்டுமென்றும், மேற்கண்ட காலக்கெடுவிற்குள் சாலை சீரமைக்கப்படவில்லை என்றால், ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மீது உரிய விதிகளின்கீழ் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், சாலை சீரமைப்புகளை குறித்த காலக்கெடுவிற்குள் மேற்கொள்ளப்பட்டதற்கான அறிக்கை மற்றும் சீரமைக்கப்பட்ட சாலையின் புகைப்படம் ஆகியவற்றை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைக்குமாறு ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2022ஆம் ஆண்டு, ஜுன் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/ x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. பெ. பிரபு,
த/பெ பெருமாள்,5/161 கூடாரமேடு, தெசவிளக்கு, சேலம் மாவட்டம்–637 501
செயல் அலுவலர்,
ஆட்டையாம்பட்டி பேரூராட்சி, ஆட்டையாம்பட்டி, சேலம் மாவட்டம்.
பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், சேலம் மண்டலம், சேலம்–1

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

14/6/22

செயலாளர்

14.6.22

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032